**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** இது சம்பந்தமாகப் பல்கலைக் கழகத்திற்கு ஏதாவது புகார்கள் வந்து, நடவடிக்கை எடுத்திருப்பதாக அரசாங்கத்திற்குத் தகவல் வந்திருக்கிறதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அரசாங்கத்தினிடம் தகவல் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் அறிந்து அளிக்கலாம்.

**டாக்டர் ச. மு. பழனியப்பன் :** இப்படி மாணவர்களுக்குத் தனிப்பயிற்சி அளிக்க பல தனியார் நிறுவனங்கள் ஏற்படுவது, கல்லூரிகளையே பாதிப்பதாக இருக்கிறது, ஆகவே இவற்றை அரசு தடை செய்ய முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தடை செய்ய இயலாது. தனியார் நிறுவனங்களை ஒழுங்கு செய்வதற்குத்தான் ஒரு சட்டம் கொண்டு வந்து நிறைவேற்றியிருக்கிறோம். அதன் அடிப்படையில்தான் இந்தத் தனியார் நிறுவனங்கள் இயங்க முடியும்.

**திரு. எஸ். வடிவேல் :** மாலைநேரக் கல்லூரிகளில் வகுப்பு எடுக்கிறவர்களுக்கு தனியாகச் சம்பளமோ, அலவன்சோ கொடுக்கப்படுகிறதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** கொடுக்கப்படுகிறது.

## *Pension for former District Board employees*

* 192 *Q.*—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state--

(*a*) whether a large number of Ex-District Board employees entitled to pension have not been paid pension so far;

(*b*) if so, the reasons therefor; and

(*c*) the steps proposed for the early payment to pensioners?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) சம்பந்தப்பட்ட பணி விதிகள் சட்டப் பூர்வமானவையாக இல்லாததால் அரசுப் பணியில் ஈர்க்கப்பட்ட முன்னாள் மாவட்டக் கழகப் பணியாளர்களை, அரசுப் பணியாளர்களாகக் கருத இயலாது என்று தெரிவித்து சென்னை, மாநிலக் கணக்குத் துறைத் தலைவர் மாவட்ட ஆட்சித் தலைவர்களால் அனுப்பி வைக்கப்பட்ட ஓய்வூதியச் செயற்குறிப்புகளைத் திருப்பி அனுப்பிவிட்டார்.

*1973 மார்ச் 1]*

(உ) 16—10—1964-ம் நாள் பிறப்பிக்கப்பட்ட பணிவிதிகள் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 309-வது பிரிவையொட்டி அரசால் மீண்டும் 6—11—1972-ம் நாள் பிறப்பிக்கப்பட்டன. இப்பணி விதிகள் தற்போது சட்டப் பூர்வமானவையாய் உள்ளன. இனி மாநிலக் கணக்குத் துறைத் தலைவர் ஓய்வூதியம் வழங்க மறுக்க மாட்டார்.

**திரு. ஏ. சுப்பிரமணியம்** : விலைவாசிகள் மிக அதிகமாக ஏறிக்கொண்டிருப்பதனால், அப்போது கொடுக்கப்பட்ட ஓய்வூதியத்தை இப்போது அதிகப்படுத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : தற்போது இல்லை.

**திரு. சோ. அழகர்சாமி** : ஓய்வு ஊதியங்கள் காலாகாலத்தில் கொடுக்கப்படாமல் நான்கைந்து ஆண்டுகள்கூடத் தாமதப்படுகிறதே, ஓய்வூதியத்தை ஓராண்டுக்குள் கட்டாயம் தரப்படுகிற முறையில் ஒரு உத்தரவை அரசு பிறப்பிக்குமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : அநேகமாக பலருக்கும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் கொடுக்கப்பட்டுவிடுகிறது. சில பேர்களைப் பொறுத்தவரை பல விவரங்கள் கேட்கப்படுவதனால், பல இடங்களில் வேலை செய்து சர்வீஸ் ரிஜிஸ்டரில் சரியான முறையில் பதிவு இல்லாதிருப்பதனால் கொஞ்சம் காலதாமதமாகிறது. ஆகவேதான் ஓய்வுபெறுவதற்கு 6 மாதங்களுக்கு முன்பிருந்தே இந்தக் கணக்குகளை எல்லாம் பார்க்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று ஆணை தரப்பட்டிருக்கிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்** : சர்விஸ் ரிஜிஸ்தரில் காலாகாலத்தில் என்ட்ரி போடப்படாத காரணத்தினால் ஓய்வு ஊதியம் வழங்குவதில் தாமதம் ஏற்படுவதாக அறிகிறேன். அவற்றை அவ்வப்போது முறையாகப் போட உத்தரவு பிறப்பிப்பார்களா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : 6 மாதங்களுக்கு முன்பே இந்த வேலைகள் துவங்கப்பட வேண்டும்—ஓய்வுபெற்ற பிறகு இவற்றை எடுத்துக் கொள்கிறபோது நேரமாகிவிடுகிறது—என்கிற உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

THIRU K. M. SUBRAMANIAM: Are the Government aware that many of these people who retire get pension only after one or two years? So, will the Government think of fixing a time-limit, say, within 3 months or six months and start paying pension ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, பெரும்பான்மையானவர்கள் குறிப்பிட்ட காலத்திற்குள்ளாகவே ஓய்வு ஊதியம் பெற்றுவிடுகிறார்கள். சிலபேர்களைப் பொறுத்தவரையில் ஏ.ஜி. ஆபிசில் இருந்து பல விளக்கங்கள் கேட்டு வருவதனால் தாமதம் ஆகிறது. அதைத் தவிர்க்கவும் முன்கூட்டியே நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறோம்.

**புலவர் சி. பழனிச்சாமி :** தலைவர் அவர்களே, ஓய்வூதியம் பெறுகின்றவர்கள் வயதானவர்களாகவும், உடல் வலிமை குன்றியவர்களாகவும் இருக்கின்றார்கள். அவர்கள் நேரடியாக கருவூலங்களுக்குச் சென்று பணம் பெறுவதில் துன்புறுகிறார்கள். ஆகவே, அவர்களுடைய துன்பத்தைப் போக்க பணவிடை மூலமாக, அவர்களுடைய வீட்டுக்குச் சென்று நேரடியாகப் பணத்தைக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** சில துறைகளில் இப்பொழுது பணவிடைத்தாள் மூலமாக அனுப்பப்படுகிறது. வேறு சில துறைகளில் இதுபற்றி விண்ணப்பம் செய்திருக்கிறார்கள். அதுபற்றி அரசாங்கம் பரிசீலித்து வருகிறது.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவர் அவர்களே, திருக்கொச்சியில் வேலை பார்த்து தமிழகத்தோடு சேர்ந்த கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த சில ஊழியர்கள் தமிழக அரசாங்கத்தில் பணியாற்றி இன்றைக்கு ஓய்வு பெற்றிருக்கிறார்கள். அவர்கள் ஓய்வூதியம் பெறுவதில் சில சட்டப் பிரச்சினைகள் எழுகின்றன. அவற்றைக் கூடிய சிக்கிரம் தீர்த்து, அவர்களுக்கு விரைவில் ஓய்வூதியம் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுபற்றிய விவரக் குறிப்புகள் என்னிடத்தில் இல்லை. அதுபற்றித் தனியாகக் கவனத்திற்குக் கொண்டுவருவார்களானால், ஆராய்ந்து தக்க முடிவெடுக்கலாம்.

## மும்முரக் கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம்

***193 வினா—திரு. எஸ். கணேசன் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மத்திய அரசின் முன்னோடி தீவிரக் கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம் தமிழ்நாட்டில் எந்தெந்தப் பகுதிகளில் தற்போது அமல்படுத்தப்படுகிறது?